# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 அக்டோபர் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 30.10.2018–ந் தேதி மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**<u>பொருள் : 1</u>**

பொதுசுகாதாரம் – சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண் 2571/ஜே1/2017 நாள் 03.10.2018 மற்றும் 257/பி1/2018 நாள் 12.10.2018–ந் தேதிய கடிதங்களில் தெரிவித்துள்ளபடி திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 12.10.2018 மற்றும் 15.10.2018–ந் தேதிகளில் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டது. மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சிகளில் உரக்கிடங்கு Micro Compost Centre பணிகளை விரைந்து முடிக்க தெரிவிக்கப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகளில் பல்வகை ஸ்டிக்கர்களை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

1. **தூய்மை இந்தியா இயக்கம் விழிப்புணர்வு**

   மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை ஸ்டிக்கர், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தொடர்பான விளக்கப்படம் ஸ்டிக்கர், மக்கும் மற்றும் மக்காத குப்பை பெரிய சைஸ் டோர் ஸ்டிக்கர்

2. **திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு**

   பிளாஸ்டிக் தடை செய்தல் ஸ்டிக்கர், கேரிபேக் இலவசம் இல்லை ஸ்டிக்கர், நீலக்கூடை மற்றும் பச்சை நிற கூடைகள் ஸ்டிக்கர்

3. **டெங்கு தடுப்பு நடவடிக்கை விழிப்புணர்வு**

   டெங்கு உற்பத்தி இடங்களுக்கான ஸ்டிக்கர், Smile Sticker மற்றும் 52 கலம் டெங்கு ஸ்டிக்கர்

மேற்கண்ட ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படி இந்நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு தூய்மை இந்தியா இயக்கம் விழிப்புணர்வு, திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட விபரப்படியான பல்வேறு விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் வாஙகுவதற்கான இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது.

| வ.எண் | விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தொடர்பான விபர ஸ்டிக்கர் | 12000 |
| 2 | மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தொடர்பான விளக்கப்படம் ஸ்டிக்கர் | 12000 |

| | | |
|---|---|---|
| 3 | மக்கும் மற்றும் மக்காத குப்பை பெரிய சைஸ் டோர் ஸ்டிக்கர், | 5000 |
| 4 | பிளாஸ்டிக் தடை செய்தல் ஸ்டிக்கர், | 2500 |
| 5 | கேரிபேக் இலவசம் இல்லை ஸ்டிக்கர், | 2500 |
| 6 | நீலக்கூடை மற்றும் பச்சை நிற கூடைகள் ஸ்டிக்கர், | 6000 |
| 7 | டெங்கு உற்பத்தி இடஙகளுக்கான ஸ்டிக்கர் | 6000 |
| 8 | Smile Sticker | 5000 |
| 9 | 52 கலம் டெஙகு ஸ்டிக்கர், | 12000 |

மேலும் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் வாஙகுவதற்கான ஆகும் உத்தேச செலவீனம் ரூ 6,25,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தூய்மை இந்தியா இயக்கம் விழிப்புணர்வு, திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு மற்றும் டெஙகு தடுப்பு நடவடிக்கை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் வாஙகுவதற்கான உத்தேச ரூ 6,25,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகர் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு விளம்பர ஸ்டிக்கர்கள் அரசு கூட்டுறவு நிறுவனஙகள் மூலம் வாஙகிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.450</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 2</u>

இந்நகராட்சியில் தொழில்வரி மறு சீராய்வு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2503/2018/ஆர்1, நாள்.21.05.2018—ன்படி, கீழக்கரை நகர்மன்ற தீர்மான எண்.392 நாள்.15.06.2018—ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி, தொழில்வரி மறு சீராய்வு செய்வது தொடர்பாக தினசரி நாளிதழில் கடந்த 20.06.2018—ன்படி செய்தி வெளியிடப்பட்டது. மேலும், பொதுமக்கள் மற்றும் தொழில் முனைவோரிடம் மறுப்புகள் மற்றும் ஆட்டேபனை மனுக்ள் எதுவும் 30 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. ஏனவே, திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி கட்டணத்தை வசூல் செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.423 நாள்.10.09.2018—ன்படி இறுதி அஙகீகாரம் வழஙகப்பட்டுள்ளது. மேலும், தொழில்வரி மறு சீராய்வு திருத்த அறிக்கையினை மாவட்ட ஆட்சியர் அலுவலக மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கு தமிழ் மற்றும் ஆஙகிலம் ‘A4’ அளவில் அரசிதழில் பிரசுரம் செய்ய கூடுதல் செலவினம் ரூ.1500/— மட்டும் அரசு தலைப்பில் கருவூலத்தில் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி முன் வைக்கப்படுகிறது.

<u>(கோப்பு எண்.இ2/591/2018)</u>

**அலுவலக குறிப்பு**

புதிய தொழில்வரி மறு சீராய்வு கட்டணத்தை வசூல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு கூடுதல் செலவினம் ரூ.1500/– வருவாய் நிதியிலிருந்து செலவினஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.451** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

இந்நகராட்சி பொதுசுகாதார (Tractor & Trailor) வாகனம் **TN65D 1882** பாடிபிட்டிங , லிப்ட் பின்பக்க டோர் , என்ட்கப் ஸ்டேரிங பாக்ஸ் , வைப்பர் வயரிங செட் கெட்லைட்முன்புறம் கேபின் செட், செல்ப்மோட்டார், எலக்ட்ரிகல்ஸ், டிஙகரிங, பிளாட்பார்ம் புதிதாக மாற்றுதல், டிரைலர் பணிகள், பெயிண்டிங மற்றும் இதர பழுதுகள் சரிசெய்யும் பணி செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ 2.00 –லட்சத்திற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 429 நாள் 10.09.2018–ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 24.10.2018–ம் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | விகாஸ் ஏஜென்ஸிஸ்,<br>739/6 மகாலெட்சுமி நகர் 3–வது தெரு,<br>கே.புதூர், மதுரை | ரூ.1,95,908/–<br>(CGST & SGST உட்பட) |
| 2 | ஸ்ரீ விக்னேஷ் என்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>தேவிப்பட்டிணம் ரோடு,<br>இராமநாதபுரம் | ரூ.2,05,974/–<br>(CGST & SGST உட்பட) |
| 3 | ஏ.ஆர். என்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>B1 காவல் நிலையம் அருகில்<br>G.H. ரோடு, இராமநாதபுரம் | ரூ.2,01,955/–<br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண்.992/2018/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

இந்நகராட்சி உழுவை மற்றும் இழுவை (Tractor & Trailor) **TN65D 1882** பழுது நீக்கம் செய்து தருவதற்கு மேற்கண்ட விலைப்புள்ளிகளில் பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட ரூ 1,95,908/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மதுரை விகாஸ். ஏஜென்ஸிஸ், மதுரை விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.452** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 4</u>

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் மேம்பாட்டுத்திட்டம் **(TURIP) 2018–2019–ன்** கீழ் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.09.07.2018–ன்படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ள சாலைப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் ரூ.100 இலட்சம் மற்றும் ரூ.200 இலட்சம் சிப்பம் 1 மற்றும் சிப்பம் 2 (Package I&II)–ல் கண்டுள்ள பணிகளுக்கு 23.10.2017–ம் தேதிய மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு சென்னை, அகார்ட் அட்வர்டைசிங மூலம் 09.10.2018–ம் தேதி பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ70,088/–க்கு பட்டியல் எண்.AAA/0732/18-19 நாள்.11.10.2018–ன்படியானது இந்நகராட்சிக்கு 25.10.2018–ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்படி பட்டியல் தொகை ரூ.70,088/– மட்டும் சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸிக்கு வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது. **(கோப்பு எண். 326/2018/இ1)**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங ஏஜென்ஸி விளம்பர கட்டணம் ரூ70,088/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.453</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 5</u>

இந்நகராட்சிக்குட்பட்ட 1–வது வார்டு புதிய பேருந்துநிலையம் பின்புறம் அமைந்துள்ள மாட்டுக் கொட்டகை கழிவுநீர் பம்பிங ஸ்டேசனில் உள்ள 10HP கழிவுநீர் மின்மோட்டாரில் பொருத்தப்பட்டுள்ள பம்ப் (KIRLOSKAR MAKE SP4L PUMP) பழுதாகி மின்மோட்டாரை இயக்க இயலாத நிலையில் உள்ளதால் அவற்றை பழுதுநீக்கம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.435 நாள்.28.09.2018–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி கழிவுநீர் மின்மோட்டார் பம்பில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கும், பழுதான உதிரி பாகஙகளை மாற்றி கொடுப்பதற்கு, பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட பணி செய்து கொடுப்பதற்கு 22.10.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | எஸ்.எம். ராஜா ரீவைண்டிங<br>420– மெயின்ரோடு,<br>கீழக்கரை | ரூ.18,450/–<br>( 1 எண்ணம்) |

| | | |
|---|---|---|
| 2 | உமா ரீவைண்டிங ஒர்க்ஸ்<br>முஸ்லிம் பஜார்<br>கீழக்கரை | ரூ.18,600/–<br><br>( 1 எண்ணம்) |
| 3 | ஸ்ரீலிங்கம் எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங ஒர்க்ஸ்<br>E5 ஆலிம் புலவர் காம்ப்ளக்ஸ்<br>(பீசா பேக்கரி பின்புறம்)<br>கீழக்கரை | ரூ.18,850/–<br><br>( 1 எண்ணம்) |

**(கோப்பு எண்.1011/2018/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ 18,450/–க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம். ராஜா ரீவைண்டிங, கீழக்கரை விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.454** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

இந்நகராட்சி அலுவலகத்தில் தண்ணீர் பயன்பாட்டிற்கு பயன்டுத்தப்பட்டு வந்த 1 HP போர்வெல் மின்மோட்டாரில் காயில் பழுது மற்றும் காப்பர் புஸ் பழுதாகி மின்மோட்டார் இயக்க இயலாத நிலையில் உள்ளதால் அவற்றை பழுது நீக்கம் செய்வதற்குரிய உத்தேச செலவினம் ரூ.8000/–க்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.439 நாள். 12.10.2018–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 1 HP போர்வெல் மின்மோட்டாரில் காயில் பழுது நீக்கம் செய்து கொடுப்பதற்கு, பொருள்கிரையம் மற்றும் வேலைக்கூலி உட்பட பணி செய்து கொடுப்பதற்கு 26.10.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | எஸ்.எம். ராஜா ரீவைண்டிங<br>420– மெயின்ரோடு,<br>கீழக்கரை | ரூ.7,100/–<br><br>( 1 எண்ணம்) |
| 2 | ஸ்ரீலிங்கம் எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங ஒர்க்ஸ்<br>E5 ஆலிம் புலவர் காம்ப்ளக்ஸ்<br>(பீசா பேக்கரி பின்புறம்)<br>கீழக்கரை | ரூ.7,200/–<br><br>( 1 எண்ணம்) |
| 3 | உமா ரீவைண்டிங ஒர்க்ஸ்<br>முஸ்லிம் பஜார்<br>கீழக்கரை | ரூ.7,350/–<br><br>( 1 எண்ணம்) |

**(கோப்பு எண்.1084/2018/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ 7,100/—க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம். ராஜா ரீவைண்டிங, கீழக்கரை விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.455** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண்.170/செ.ம.தொ/2018 நாள்.31.08.2018 மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண்.176/செ.ம.தொ/2018 நாள்.11.09.2018—ன்படி தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை மலர்—2018ல் இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டங்களை விளம்பரம் வெளியிட்ட வகைக்கு கீழ்க்காணும் நாளிதழ்கள் கட்டணங்கள் கோரி பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | பட்டியல் விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | தினமணி நாளிதழ் ( Express Publications), மதுரை | பட்டியல் எண். MDUTN30052214 நாள்.05.10.2018 | 25,200/— |
| 2. | தினமலர் நாளிதழ் | பட்டியல் எண்.096 நாள்.18.10.2018 | 25,725/— |

**(கோப்பு எண்.425/2017/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்காணும் நாளிதழ்களின் விளம்பர கட்டணங்களுக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.456** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 8**

இந்நகராட்சிப் பகுதியில் திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்துவதை மாற்றும் திட்டத்தின் கீழ், உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2013—2014, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2013—2014 மற்றும் மாநில பகிர்வு நிதி 2013—14 ஆகிய மூன்று திட்டத் தலைப்புகளில் ரூ.54,00,000/— மதிப்பீட்டில் Universal Design Toilet அமைப்பதற்கு 24.09.2013—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகைக்கு ரூ.53,65,835/—க்கு குறைவாக 1% ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s URBANE INDUSTRIES LTD, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி இந்நகர் மன்ற தீர்மான எண்.224 நாள்.03.10.2013—ன்படி ஒப்புக்கொள்ளப்பட்டு, மேற்காணும் நிறுவனத்திற்கு 06.12.2013—ம் தேதி வேலை உத்திரவு வழஙகப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக 19.06.2014–ந் தேதி சப்ளை செய்யப்பட்ட பொருட்களுக்கு ரூ.13,41,459/– மட்டும் இந்நகராட்சி மூலம் M/s URBANE INDUSTRIES LTD, சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. அதன் பின்பு மேற்கண்ட பொருட்களைக் கொண்டு கழிப்பிடம் நிறுவும் பணிகளை தொடர்ந்து செய்யாமல் இருந்ததால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பல முறை தொலைப்பேசி மூலமாகவும், நேரில் தெரிவித்தும் மற்றும் இவ்வலுவலக கடிதங்கள் மூலமாக அறிவிப்புகள் அனுப்பியும், கழிப்பிடம் அமைக்கும் பணியினைச் செய்யாமல் பணி உத்திரவு வழஙகப்பட்டு 4 ஆண்டுகளுக்கு மேலாகிய நிலையில், M/s URBANE INDUSTRIES LTD சென்னை நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட பணி உத்திரவினை இந்நகராட்சிப் பொறியாளர் (பொ) அவர்களின் 27.12.2017–ந் தேதிய குறிப்பின்படி, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.313, நாள்.09.02.2018ன்படி அனுமதி பெற்று, M/s URBANE INDUSTRIES LTD சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்திரவு இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.1864/2013/இ1, நாள்26.02.2018ன்படி ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சிப் பகுதியில் நம்ம கழிப்பறை Universal Design Toilet உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2013–14, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2013–14 மற்றும் மாநில பகிர்வு நிதி 2013–14 ஆகிய திட்ட நிதிகளில் மூன்று இடஙகளில் 6–எண்ணம் அமைப்பதற்கு, பொறியாளர்களால் உரிய மதிப்பீடுகள் தயார் செய்து இந்நகர்மன்ற தீர்மானம் எண். 446, நாள். 12.10.2018–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் நம்ம கழிப்பறை Universal Design Toilet மூன்று இடஙகளில் 6–எண்ணம் அமைப்பதற்கு 30.10.2018–ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2013–14ம் ஆண்டு உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் (Infra Gap filling Fund) நிதிக்குரிய மதிப்பீடு ரூ.9,50,000/–க்கு அன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு (2) எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் (Infra Gap filling Fund)2013–14** | | | | |
| 1 | கீழக்கரை அரசு தாலுகா மருத்துவமனை வளாகத்தில் UNIVERSAL DESIGN TOILET (பெண்கள் –2 இருக்கை மற்றும் பெண் மாற்றுத்திறனாளி–1 இருக்கை) கட்டுதல் | 9.50 | ARTE என்டார்பிரைசஸ், அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் சென்னை–58 | மதிப்பீட்டு தொகையை விட 2.22% கூடுதல் |
| | | | Pack Tech Systems & Equipments, சிட்கோ விமன்ஸ் இன்டஸ்ட்ரியல் பார்க், சென்னை– 62 | மதிப்பீட்டு தொகையை விட 3.65% கூடுதல் |

**(கோப்பு எண்.1864/2013/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு.</u>**

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 2.22 சதவீதம் கூடுதலாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.457</u>** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 9</u>

இந்நகராட்சிப் பகுதியில் திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்துவதை மாற்றும் திட்டத்தின் கீழ், உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2013–2014, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2013–2014 மற்றும் மாநில பகிர்வு நிதி 2013–14 ஆகிய மூன்று திட்டத் தலைப்புகளில் ரூ.54,00,000/– மதிப்பீட்டில் Universal Design Toilet அமைப்பதற்கு 24.09.2013–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகைக்கு ரூ.53,65,835/–க்கு குறைவாக 1% ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s URBANE INDUSTRIES LTD, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி இந்நகர் மன்ற தீர்மான எண். 224 நாள். 03.10.2013–ன்படி ஒப்புக்கொள்ளப்பட்டு, மேற்காணும் நிறுவனத்திற்கு 06.12.2013–ம் தேதி வேலை உத்திரவு வழஙகப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக 19.06.2014–ந் தேதி சப்ளை செய்யப்பட்ட பொருட்களுக்கு ரூ.13,41,459/– மட்டும் இந்நகராட்சி மூலம் M/s URBANE INDUSTRIES LTD, சென்னை நிறுவனத்திற்கு வழஙகப்பட்டது. அதன் பின்பு மேற்கண்ட பொருட்களைக் கொண்டு கழிப்பிடம் நிறுவும் பணிகளை தொடர்ந்து செய்யாமல் இருந்ததால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பல முறை தொலைப்பேசி மூலமாகவும், நேரில் தெரிவித்தும் மற்றும் இவ்வலுவலக கடிதஙகள் மூலமாக அறிவிப்புகள் அனுப்பியும், கழிப்பிடம் அமைக்கும் பணியினைச் செய்யாமல் பணி உத்திரவு வழஙகப்பட்டு 4 ஆண்டுகளுக்கு மேலாகிய நிலையில், M/s URBANE INDUSTRIES LTD சென்னை நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட பணி உத்திரவினை இந்நகராட்சிப் பொறியாளர் (பொ) அவர்களின் 27.12.2017–ந் தேதிய குறிப்பின்படி, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.313, நாள்.09.02.2018ன்படி அனுமதி பெற்று, M/s URBANE INDUSTRIES LTD சென்னை நிறுவனத்திற்கு வழஙகப்பட்ட பணி உத்திரவு இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.1864/2013/இ1, நாள்26.02.2018ன்படி ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சிப் பகுதியில் நம்ம கழிப்பறை Universal Design Toilet உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2013–14, ஒருஙகிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2013–14 மற்றும் மாநில பகிர்வு நிதி 2013–14 ஆகிய திட்ட நிதிகளில் மூன்று இடஙகளில் 6–எண்ணம் அமைப்பதற்கு, பொறியாளர்களால் உரிய மதிப்பீடுகள் தயார் செய்து இந்நகர்மன்ற தீர்மானம் எண். 446, நாள். 12.10.2018–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிப்

பகுதியில் நம்ம கழிப்பறை Universal Design Toilet மூன்று இடஙகளில் 6–எண்ணம் அமைப்பதற்கு 30.10.2018–ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2013–14ம் ஆண்டு மாநில பகிர்வு நிதி திட்டம் (State Finance Commission) நிதிக்குரிய மதிப்பீடு ரூ.9,50,000/–க்கு அன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு (2) எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **மாநில பகிர்வு நிதி (State Finance Commission) 2013–14** | | | | |
| 1 | கீழக்கரை நகராட்சி வார்டு எண்.10 ஜெட்டிப்பாலம் வளாகத்தில் லைட்ஹவுஸ் காம்ப்பவுண்ட் சுவர் அருகில் பெண்களுக்கான UNIVERSAL DESIGN TOILET (பெண்கள்–2 இருக்கை மற்றும் பெண் மாற்றுத்திறனாளி–1 இருக்கை) கட்டுதல். | 9.50 | ARTE என்டர்பிரைசஸ், அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் சென்னை–58 | மதிப்பீட்டு தொகையை விட 0.42% கூடுதல் |
| | | | Pack Tech Systems & Equipments, சிட்கோ விமன்ஸ் இன்டஸ்ட்ரியல் பார்க், சென்னை– 62 | மதிப்பீட்டு தொகையை விட 1.80% கூடுதல் |

**(கோப்பு எண்.1864/2013/இ1)**

**அலுவலகக் குறிப்பு.**

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 0.42 சதவீதம் கூடுதலாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.458** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 1,2,3,4,5,6,7,8,9,10 மற்றும் 11–ஆகிய ( 11 வார்டுகள் ) உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் முதல்நிலை திடக்கழிவு மேலாண்மை பணிகள் தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு (Outsourcing) முறையில் முதல் நிலை சேகரிப்பு (உலர் மற்றும் ஈரக்கழிவுகள் பிரித்து அளித்தல்) பணி செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண் 90 நாள் 24/02/2017–ந் தேதிய அனுமதியின் படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு கடிதம் ந.க.எண் 6011/பி3/2017 நாள் 15.06.2017 அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்காணும் அனுமதிக்கிணஙக, இந்நகர் மன்ற தீர்மான எண் 198 நாள் 31.08.2017–ன் படி மேற்கண்ட பணிக்கு 24.10.2017–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நகர் மன்ற தீர்மான எண்230 நாள் 30/10/2017–ன் படி (எக்ஸர்நெட்) நிறுவனத்திற்கு 09.11.2017 முதல் 08.11.2018 வரை ஓராண்டு காலத்திற்கு மட்டும் பணிகள் செய்ய இவ்வலுவலக ந.க.எண். 1528 / 2012/ எச்1 நாள். 09.11.2017 பணி உத்திரவு வழஙகப்பட்டது. மேற்காணும் பணி உத்திரவு 08/11/2018 தேதியுடன் முதல் முடிவடைவதால் எக்ஸர்நெட் நிறுவனம் மூலம் பணிகால நீடிப்பு செய்து உத்திரவு வழஙக 28/10/2018–ல் மேற்காணும் நிறுவனம் மூலம் விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்நகராட்சி பகுதியில் 25 பணியாளர்களைக் கொண்டு நல்லமுறையில் துப்புரவு பணிகள் செய்து கொடுப்பதால் ஓராண்டு காலத்திற்கு பணிநீடிப்பு செய்யலாம் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.: 6011/பி3/2017 நாள்.15.06.2017– தேதிய அனுமதி அடிப்படையில் 2017–2018–ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அஙகீகரிக்கப்பட்ட தினக்கூலி விலைவிகிதம் ரூ. 384 ன் படி இந்நகர் பகுதியில் முதல்நிலை திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 25 பணியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு ஆகும் செலவீனம் ரூ,42,50,000/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் 09/11/2018 முதல் 08/11/2019 வரை பணி காலநீட்டிப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண் 1528/2012/எச்1 )**

**அலுவலக குறிப்பு**

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சி யில் 25 பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் செய்ய ரூ-42,50,000/-க்கு செலவீனஙகள் மேற்கெள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. எக்ஸர்நெட் நிறுவனத்திற்கு 09/11/2018 முதல் 08/11/2019 வரை ஓராண்டு காலத்திற்கு பணிநீடிப்பு செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்

**தீர்மானம் எண்.459** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி